# ஆத்ம ஜோதி



வாழி சுத்தானந்த மாமுனிவன் வண்டமிழில்
ஆழிபால் நூல்கள் அளித்து!

சோதி 4 ] 1952 — நந்தன ௵ ஐப்பசி ௴ [ சுடர் 12

உ

# பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| சுத்தானந்தர் வாழ்த்து .... .... | 309 |
| தருமபீடமாய் இலங்கை வாழ்க! .... .... | 310 |
| அந்தணாளன் அருந்தவ யோகி .... .... | 311 |
| ஒருமையில் நிற்கும் பெருமையாளர் .... .... | 314 |
| ஆனந்த மாலை ... ... | 315 |
| காலத்தை வென்று நிற்கும் கவிதை .... .... | 316 |
| புண்ணியபூமிப் படலம் ✻ .... .... | 317 |
| வசன மின்சாரம் .... .... | 318 |
| நவரஸ நடனாஞ்ஜலி .... .... | 319 |
| புத்தஜோதிப் படலம் ✻ .... .... | 320 |
| நாவலர் பெருமான் .... .... | 321 |
| புதுயுகக் கவி .... .... | 322 |
| பகவத் கீதைப் படலம் ✻ .... .... | 323 |
| சக்தியைப் பெறும் வழி .... .... | 325 |
| சித்தாந்த முழக்கம் .... .... | 328 |
| தமிழ்க் கவிதையின் பண்பும் சுத்தானந்தரும் .... .... | 329 |
| கிறிஸ்து ஜோதிப் படலம் ✻ .... .... | 330 |
| சிலம்புச் செல்வம் .... .... | 331 |
| அல்குரான் படலம் ✻ .... .... | 332 |
| அருண ஜோதிப் படலம் ✻ .... .... | 333 |
| இராமகிருஷ்ண பரமஹம்ஸர் .... .... | 334 |
| விவேகானந்தப் படலம் ✻ .... .... | 335 |
| ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் .... .... | 336 |
| அருட்செல்வம் .... .... | 337 |


✻ இவை பாரதசக்தி மகாகாவியத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவை.


# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு.

சந்தா விபரம் :

ஆயுள் சந்தா ரூ. 75/-; ஒரு வருடம் ரூ. 3/-; தனிப் பிரதி சதம் -/30·

ஆசிரியர் : க. இராமச்சந்திரன்,
60, டீல் இடம், கொழும்பு - 3.

பதிப்பாசிரியர் : நா. முத்தையா,
'ஆத்ம ஜோதி' நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)






## சுத்தானந்தர் வாழ்த்து

வாழ்க சுத்தானந்தன் ! வாழ்க சுத்தசக்தி
வாழ்க வரகவியே !
வாழ்க மஹாயோகி ! வாழ்க மஹாதியாகி !
வாழ்க தமிழ்மணியே ! (வாழ்க)

அருணை ரமணேசன் கருணைக் கிலக்கான
அற்புத மோனியவன்
அரவிந்தத் தேனுண்டு ஆனந்தம் பொங்கிய
ஆவேச வாணியவன் (வாழ்க)

எந்தாய் மொழிக்கிணை எங்குமே யில்லையென்
றெடுத்து விளக்கியுள்ளான்—அதில்
எண்ணரிய நூல்கள் இயற்றிப் புகழ்நமக்
கேற்றிய எந்தலவன் (வாழ்க)

சிங்கப்பூர் ஜப்பான் சீயம் மலாயாவில்
சீர்த்தி மிகவும்பெற்றான்—அங்கே
எங்களின் சைவத்தின் எழிலை எடுத்தோதி
எமக்குப் பெருமைதந்தான் (வாழ்க)

ரோக்கியோ சர்வ கலாசாலை தன்னிலே
முக்கிய மக்கள்கேட்க,
இக்காலம் வேண்டிடும் சுத்தசன் மார்க்கத்தை
எடுத்து முழக்கியுள்ளான் (வாழ்க)

பாரத சக்தி யெனும்மஹா காவியம்
பாடி யெமக்களித்தான்—அதைப்
படித்துத் தமிழர்கள் பண்புற்று வீரராய்ப்
பாரினில் வாழ்ந்திடவே. (வாழ்க)

—க. இ.

# தரும பீடமாய் இலங்கை வாழ்க!

திரசங்கராபாரணம்] [திஸ்ர ஏகம்

எங்கள் பொன் இலங்கை வாழ்கவே—காலை
இரவி போல அழகு பொலிகவே!
மங்களச் சுதந்தரக் கதிர்—வீசி
மடமை யடிமை யச்ச மொழிகவே (எங்)

அன்புறுதி யுண்மை வீரமும்—காட்டும்
ஆண்மைச் சிங்கம் இலகு முந்நிறம்
நண்பு மிக்க லங்கையின் கொடி—அதை
ஞால மெல்லாம் புகழ நாட்டுவோம் (எங்)

தென்கடலின் மார்ப கத்திலே—பூத்த
செழுந்திருக் கமலம் போன்றதே—
பொங்கு புத்த சைவ நன்மணம்—வீசிப்
பொலிக நல்ல யோக நாடிதே! (எங்)

முத்தமிழ் முருகன் வீரமும்—சுத்த
மூர்த்தியின் அருட்கனலுடன்,
புத்தரின் கருணை யுள்ளமும்—கொண்ட
புனித மான தரும பீடமாய். (எங்)

ஏசுநாதர் அன்பு வெள்ளமும்—தீன்
இஸ்லாமி யத்தின் பத்தி உள்ளமும்,
தேசுலாவு நாவலர் சொல்லும்—சைவத்
திருமறையின் பயனு மோங்கவே (எங்)

சித்திர வியற்கை சூழவே—என்றும்
செயமணிக் கொடிகள் ஆடவே
நித்திலக் குவை நிலாவிலே—செல்வி
நிருத்தமிட் டழகு பொங்கவே (எங்)

அலைதரும் அளவிற் செல்வமும்—ஓங்கு
மலைதரும் வளங் குலுங்கவே (எங்)
கலைதரும் அறிவுச் செல்வமும்—மல்கக்
கடவுளின் அருட் செல்வத்தினால் (எங்)

—சுத்தானந்த பாரதியார்.



ௐ

# அந்தணாளன் அருந்தவ யோகி

ஆசிரியர்

'வாழ்வையே தவத்திற்கு நிலைக்களன் ஆக்கியவர்' என்றும், 'வற்றாத இனிய தமிழ் ஊற்று', 'தவம் பெற்ற தவம்' என்றும், 'ஒருமையில் நிற்கும் பெருமையாளன்', 'அந்தணாளன் அருந்தவன்' என்றும், இற்றைக்கு முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரேயே, வ. வெ. சு. ஐயர், உ. வே. சாமிநாதையர், வி. கலியாண சுந்தரனார் போன்ற பெரியார்களால் புகழ்ந்து பாராட்டப்பட்ட புதுவை யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பூரண சிவயோகப் பொலிவில் இந்த மாசம் முழுவதும் இலங்கையெங்கும் திக்குவிஜயஞ்செய்ய இசைந்துள்ளாரென்பதை மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றோம். கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலாய பெரிய பட்டினங்களில் அவருக்கு குதூகலமான வரவேற்பு ஒழுங்குகள் நடைபெறுகின்றன. அரசியல் வேற்றுமைகளாலும் சூழ்ச்சிகளாலும் பிணக்குற்றுப் பிரிந்துள்ள மக்களையும் இணக்கமுறச் செய்வதற்கு, அவரது வருகையைப் பயன்படுத்தவேண்டியது அறிஞர் கடமை.

இத் தொடர்பில், 'ஆத்ம ஜோதி'யை சுத்தானந்த மலராக்கி, அவரை ஆட்கொண்டு வழிகாட்டி அருட்பணி கொள்ளும் பராசக்தியின் திருவடியில் சமர்ப்பிக்கின்றோம். ஒரு குழந்தை பிறந்து அதற்கு சாதகம் கணிக்கும்போது முதலில் கவனிக்கப்படுவது அரிட்டக் குற்றம். அதாவது, அக்குழந்தையின் ஆயுளில் முதல் நான்கு ஆண்டுகளில் நிகழக்கூடியதாகத் தோன்றும் மாரக தோஷம். இது பால அரிட்டமென அழைக்கப்படும். இந்தக் கால எல்லையைத் தாண்டினால்தான் குழந்தைக்கு ஆயுள் உண்டு என்பார்கள் சோதிட நூல் வல்லுனர். 'ஆத்ம ஜோதி'க்கு இந்த அரிட்டக்காலம் நீங்கி, ஐந்தாவது ஆண்டு மங்களகரமாக ஆரம்பிக்கப்போகின்றது. இச் சுபவேளையில்

சென்ற நான்கு ஆண்டுகளாக அதனோடு இணைபிரியாத தொடர்பு வைத்துவந்த ஒரு மகானின் பேரால் இம் மலர் வெளிவருவது சாலவும் பொருத்தமுடைத்தன்றோ! இந்த நாட்டில், எத்தனையோ வாரப் பதிப்புகளும் மாதச்சஞ்சிகைகளும் தோன்றி, மிகவும் சொற்பகால எல்லைக்குள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோனதை அன்பர்கள் நன்கறிவார்கள். பராசக்தியின் அருளாலும், பெரியாரின் ஆசியாலும், அபிமானிகளின் ஆதரவாலும், 'ஆத்ம ஜோதி' சென்ற நாற்பத்தெட்டு மாசங்களாக ஒவ்வொரு மாசமும் முதல்வாரந் தவறாமல் சுடர்விட்டுள்ளது. இந்த அத்யாத்ம சேவையை இன்னுந் தொடர்ந்து செய்ய தேவியின் கடாட்சத்தையும் அன்பர்களின் ஆதரவையும் வேண்டுகின்றோம்.

சுத்தானந்தர் எழுதிக் குவித்துள்ள நூல்கள் ஒருதனி வாசிகசாலைக்குப் போதியவையாகும். இச்சிறு வெளியீட்டில் அவற்றையெல்லாம் விபரிக்கவோ விமர்சனம் செய்யவோ முடியாது. முக்கியமான சிலவற்றிலிருந்து தெரிந்தெடுத்த மணிவாக்குகளை மாத்திரம் இங்கு தந்துள்ளோம். 'யோகசித்தி' அடிகளின் வாழ்வும் வரலாறுமெனக் கொள்ளத்தக்க நூல்; அவரது உட்புற அனுபவச் சுரங்கம். ஆசையாணவ மாயங்களிற் கட்டுண்ட பாசான்மா, மாசகன்று, அமர வாழ்வடையும் சாதனங்களனைத்தும் இந் நூலில் அடங்கியுள்ளன. 'உலக வாழ்வின் உண்மையை உணர்த்தி, இகபர சுகங்களிரண்டையுந் தரும் வழிகளை நன்கு வகுத்துக்காட்டும், குணம்திகழ் ஞானகுரவனையொத்தும், உற்றுழி உதவும் யோகசித்தி'யெனப் புகழ்கிறார் புத்தேரிப் புலவர் தேசிகவிநாயகம்பிள்ளை. 'பாரதசக்தி மகாகாவியம்' புதிய உலகில் புதிய பூரண வாழ்வைத்தரும் அமரானந்த ஊற்றாகும். கவிக்குக் கவியாகவும், கலைக்குக் கலையாகவும் அமைந்துள்ள இக் காவியத்தை வாழ்விற்கு வழிகாட்டும் சாதன வேதமென அழைத்தலேசரி. மனித சமுதாயம் நாகரிக ஏணியின் முதலாவது படியைத் தாண்டிய காலந்தொட்டு, இருபதாம் நூற்றாண்டில் ரமணர், அரவிந்தர், காந்தி, சிவானந்தர், ராமதாசர் முதலிய மகாத்மாக்களின் கீர்த்தி உலகெங்கும் பரவிய காலம் வரையில் தோன்றிய உன்னத லட்சியங்கள், விஞ்ஞான வித்தைகள், அத்யாத்ம தத்துவங்கள், யோகநூல் நுட்பங்களெல்லாம் இதில் அடங்கியுள்ளன. சுருங்கக் கூறின், இந் நூலை மனித சமுதாயத்தின் உண்மை வரலாறு, மனிதான்மாவின் தெய்வ விளக்கமென்று சொல்லலாம் 'பாரத சக்தி' என்றால் என்ன? சுத்தானந்தரையே இக் கேள்விக்கு விடைதரச் செய்வோம்:



"வீரர் வீறது; வித்தகர் சித்தது;
தீரர் யோகத் திறனது; மானிடர்
பூரணம் பெறும் புண்ணியத் தீயது;
தாரகம் அது — பாரத சக்தியே!"

என்கிறார் அவர். முழுதும் உண்மையே; புகழ்ச்சியுரையல்ல. 'யோகசித்தி'யும் இந்த மகாகாவியத்தில் ஓர் படலமாக அமைந்துள்ளது.

இந்த அற்புத நூல் சுவாமிகளின் அருட்புலமையை உலகுள்ள மட்டும் நிலவச்செய்யுமென்பது நிச்சயம். கற்றபடி நிற்கப் பழகாத பண்டித உலகு அதன் மகிமையை இன்னும் உணராமல் இருக்கலாம். ஆனால், பராசக்தியின் அருளால் அது உலகமொழிகளிலும் வெளிவருமென்பது நிச்சயம். 'படலம்' என்ற தலைப்பின்கீழ் இந்த மலரில் சேர்த்துள்ள பாடல்கள் பாரதசக்தி மகாகாவியத்திலிருந்து எடுக்கப்பட்டவையேயாம். ஏனையவைகள் அந்தந்த நூலின் பெயரையே தலையங்கமாகக் கொண்டுள்ளன.

சென்ற ஐந்து மாசங்களாக அடிகள் சிங்கப்பூர், மலாயா, சீயம், ஜப்பான் முதலாய நாடுகளில் சைவசமயப் பிரசாரமும், சுத்த சன்மார்க்க உபந்நியாசங்களும் செய்துவிட்டு, தாய்நாடு திரும்பும் வழியில் தான் இலங்கையில் தங்கப்போகின்றார். ஜப்பானில் நடந்த உலக பௌத்த மகாநாட்டிலும் அவர் கலந்துகொண்டதானது கி. பி. 520—525-ம் ஆண்டுகளில் ஓர் உத்தம தமிழ்மகன் கிழக்கு ஆசியாவில் செய்த அற்புத சமயப் பணியை நினைவூட்டி நம்மைப் பெருமை கொள்ளச் செய்கின்றது. ஸென் (Zen) என்று ஜப்பானிலும், சான் (Ch'an) என்ற பேரால் சீனாவிலும் நிலவும் தியானமார்க்கமென்னும் பௌத்தமதப் பிரிவு கி. பி. ஆறாம் நூற்றாண்டில், காஞ்சீபுரத்தை ஆண்ட அரசனின் குமாரனான போதி தருமரால் நிறுவப்பட்டதாகும். அவர் டா—மோ (Ta—Mo) என்ற பேருடன் சீனரால் அவர்கட்குரிய இருபத்தெட்டுச் சமய குரவர்களில் ஒருவராகக் கொண்டாடப்படுகின்றார். ஜப்பானிலும் சீனாவிலும் அவருக்குக் கோயில்களுமுண்டு. இந்தியாவில் தோன்றும் எந்தச் சமயதத்துவமும் தென்னாட்டின் அங்கீகாரமாகிய முத்திரையைப் பெற்றால்தான் அது உலக நாணயமாகும் செல்வாக்கைப் பெறமுடியுமென சகோதரி நிவேதிதா கூறியிருப்பதை இங்கு வாசகர்கட்கு நினைவூட்டுகின்றோம்.

# ஒருமையில் நிற்கும் பெருமையாளர்.

"சுத்தானந்த பாரதியார் நூலை நான் கருத்துடன் படிப்பதுண்டு; அவரைப் போன்று, அற்புத நூல்களை யார் செய்யமுடியும்? ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுத வல்லவர்"—திரு. இராஜகோபாலாச்சாரியார்.

✲ ✲ ✲ ✲

"சுத்தானந்த பாரதியார் அறிவால், அன்பால், பாட்டால், உரையால், தமிழ் நாட்டைக் கொள்ளை கொண்டவர்; இயற்கையில் தோய்ந்து, இறையுண்மையில் உறுதிகொண்டவிரதர்; ஒருமையில் நிற்கும் பெருமையாளர்."

—திரு. வி. கலியாண சுந்தர முதலியார்.

✲ ✲ ✲ ✲

"இனிமை, எளிமை, உண்மை—இம்மூன்று குணங்களும் சுவாமிகளுடைய பாடல்களின் உடன் பிறப்புக்களா யுள்ளன; தேச பக்தியும், தமிழன்பும் அப்பாடல்களில் பொங்கித்ததும்புகின்றன; அறிவும் ஆற்றலும் செறிந்து விளங்குகின்றன; கருத்துலகிற் புதுப்பிரதேசங்களிற் சென்று வெற்றி கொள்ளும் ஆத்ம சக்தி நிரம்பக் காணப்படுகின்றது. சுவாமிகள் வசன நடையினும் மேலே கூறிய இயல்புகள் பயின்று வருதலைக் காணலாம். செவ்விய மதுரமான சொற்கள், சுருங்கிய தொடர்கள், ஆழ்ந்த கருத்துக்களைச் சிறப்பாகக் கொண்ட பல வசன நூல்களைப் புதியமுறையின் எழுதியிருக்கிறார்கள். அவை நெடுங்காலமாகத் தேங்கிச் சிறையுண்டு கிடந்த தமிழர் வாழ்விற்குப் புதிய வழிகாட்டி, அவ்வழியில் உய்க்கும் ஆற்றல் சான்ற நூல்கள்; அவை தமிழ் மக்களுக்கு வேண்டும் உறுதி மொழிக் கழஞ்சியம். இறைக்குந் தோறும் ஊறுகின்ற மணற் கேணி போன்றவர்கள் சுவாமிகள்."

—திரு. S. வையாபுரிப் பிள்ளை.

✲ ✲ ✲ ✲

"இன்று தமிழ் உலகில் 'சுத்தானந்த பாரதியார்' என்றால், அது ஒரு தனிப்பட்ட மனிதனைக் குறிப்பதோடு நின்றுவிடாது. தமிழ் நாட்டில் அவர்கள் ஒரு நிலையமாகத் திகழ்கிறார்கள். அவர்கள் ஒரு நூல் நிலையம், அன்பிற்கு அச்சாணி; கலைக் களஞ்சியம், கவிக்குக் காமதேனு; கல்விக் கடல்; தவக்கொழுந்து; தமிழ்க்கனல்; துறவுக்குத் தூண். இவ் வடிகளாரின் பெருமை தமிழ் வளர்ந்த நாடெல்லாம் இமிழென் றிசைத்து இலங்காநிற்கும். அன்னாரை அறியாதார் தமிழ் நாட்டில் இல்லை. அவர்கள் எழுதிக் குவித்திருக்கும் நூல்கள் எண்ணற்றன. அவையே ஒரு தனி வாசகசாலையை நிரப்பிவிடும். அவர்கள் சலியாது உழைக்கும் சதுர்ப்பாடுடையவர்கள். அவர்கள் தாய்மொழிக்கும், நாட்டிற்கும், மக்களுக்கும், உலகிற்கும், ஆண்டவனுக்கும் தளராது தொண்டியற்றும் வீரம்டைத்த விழுமியோர் ஆவார்கள்"

—பேராசிரியர், ஜி. சுப்பிரமணியபிள்ளை.



# ஆனந்த மாலை

## நம் பெருமாள் பணிசெய்ய வாரீர்! வாரீர்!

எல்லையிலா உலகையருட் கோயிலென்போம்
எவ்வுயிரும் எம்முயிரென் றினிதே செய்வோம்
தொல்லை செயும் சாதிமதச் சார்பை நீப்போம்
சுத்தான்மப் பொதுவினிலே ஒத்து வாழ்வோம்
அல்லலில்லை கலக்கமில்லை அச்சம் இல்லை;
அடிமையலோம் நாமார்க்கும் குடியு மல்லோம்;
நல்லதிருத் தொண்டரேலாம் வாரீர் இங்கே,
நம்பெருமான் பணிசெய்ய நாடுவோமே.

✲ ✲ ✲

உடலிளமை பெறநாளும் உறுதி செய்வோம்
ஊணுறக்க நெறிகாப்போம் உண்மை காப்போம்
அடலரிய புலன்களைநாம் அடக்கிவெல்வோம்
அறவழியைப் போற்றிடுவோம் ஆவிபோலே;
திடவுறுதி கொண்டுலகஞ் சேர்ந்து வாழத்
தெள்ளியசன் மார்க்கநிலை செழிக்கச் செய்வோம்;
கடலருந்தி வான்பொழியும் கருணை போலே
காசினியில் உண்டு திருத்தொண்டு செய்வோம்.

✲ ✲ ✲

பாழான பகையின்றிப் பொறாமை யின்றிப்
படுநாசப் போரின்றிப் பங்க மின்றிச்
சூழுலகம் சுத்தான்ம சித்தி பெற்றே
சுதந்தரமாய் முன்னேறும் சூட்சு மத்தை
ஆழ்ந்துள்ளே யறிந்துணரத் தியான மொன்றே
அற்புதமாம் சாதனமாம் ஆதலாலே
வாழுலக நேயர்காள்! மனத்தைக் கட்டி
மாசற்ற பரம்பொருளைத் தியானிப் பீரே!

# காலத்தை வென்று நிற்கும் கவிதை.

—:0:—

( கவிராஜ பண்டித நா. கனகராஜையர். )

கவிதை என்பது உள்ளத்தில் ஊறிய இன்ப வெள்ளம்; இயற்கையில் பூத்த எழில் மலர்; அருளும் அழகும், ஒளியும் இன்பமும் தாண்டவமாடும்கலையரங்கம். அருள்பெற்ற உள்ளத்தில் அழகுத்தெய்வத்தைக்கண்டவனே கவி; அவன் பேச்சே பேச்சு, பாட்டே பாட்டு; அவன் செய்வதே செய்யுள்; அவன் கனவே கலை, இயற்கை அன்னைக்கு அவன்கவிக்கும் திருமுடியே கவிதை. அக்கவிதை உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன; எத்தனையோ கவிகள் முழங்குகின்றன. மூலைதேடி முந்நூறு ஓலை கிழித்து மூன்று கவி செய்த காரிகைப்புலவர் எத்தனையோ பேர்! காலத்தை வென்று நின்று நிலைத்த கவிகள் பத்துப் பதினைந்து பேர்களே. கட்டுவதன்று, அருவிபோலக் கொட்டுவதே கவிதை! கவிதை அழகின் சிற்பம்! அது யாப்புளி வைத்துச் செதுக்கிய சொல்லடுக்கன்று. மின்னலைப்போலப் பளிச்சென்று அதன் அழகு வடிவம் கவியுள்ளத்தில் வந்து கனலும்! கவியுள்ளம் ஓர் அருட்சுரங்கம், அரியகலைக் கோயில்; அதன் செல்வம் அழியாச் செல்வம்.

தமிழ் கவிச்செல்வம் நிரம்பியது; சங்க காலக் கவிகள் இயலழகும் இயல்பான நடையும் பெற்று, இயற்கை அன்னைக்கே அணிகலமானவை. பிற்காலம் வந்த கவிகளில் கம்பனே கவிச்சிகரம். அவனுக்குப் பிறகு நீண்டகாலம் கவிக்கலை சொல்மினுக்கானது; நான்கடி நடந்து வற்றி வறண்டது.

செந்தமிழ்வாணி புதிய பொலிவுடன் எழுந்தாள்; இரண்டு வாடா மலர்களைத் தந்தாள். ஒன்று வீராவேசத்திருவுடன் பொலிந்து கால வெள்ளத்தில் மறைந்தது; அதன் மணம் காலத்தை வென்று பரவுகிறது; மற்றொரு மலர் சிவகங்கையில் வேர் கொண்டு, சேரமா தேவியில் அரும்பி, புதுச் சேரியில் மலர்ந்து, பரம சாந்த நிலையிலிருந்து புதுமணம் பரப்புகிறது. இப்புது மலரைத் தமிழர் அறிவர்; அதன் தூய இன்பத்தை இன்னும் நன்றாகத் தமிழர் உணரவேண்டும். சுப்பிரமணிய பாரதியார் கவிமழை பொழிந்தார்; உடலுள்ள வரையில் அவர் பெருமையைத் தமிழர் அறியவில்லை. இன்று அவர் கவிதையை உச்சிமேல் வைத்துக் கொண்டாடித் திருவிழா நடத்துகின்றனர். சுவாமி சுத்தானந்த பாரதியார் இதோ இருக்கிறார்; ஓயாமல் கவிமலர்கொட்டுகிறார். அவர் மூச்செல்லாம் தமிழ்ப்-பணியே! அவர் வாக்கு நீண்ட தவத்தில் மலர்ந்த அருள் வாக்கு. அவர் நிலையான கவிச் செல்வத்தை மலைமலையாக வாரிக் குவித்திருக்கிறார். அவரையும் தமிழர் புறக்கணிப்பாரோ? நிகழ்காலம் ஒதுக்கினாலும், வரும் காலம் இந்த அருட் கவியை மதிப்பதுறுதி; அவர் மொழி உள்ளெழுந்த நிறைமொழி அவர் திருவாக்கு நன்றாகச்செதுக்கிய மாணிக்கம்; புடம் வைத்துப்பொலியுந் தங்கம்; போலித்தங்கமன்று; புலவர் உரைகல்லில் உரைத்து மதித்த பத்தரை மாற்றுத் தங்கம். எவ்வளவு சோதனை செய்தாலும், அது காலத்தை வென்று விளங்கும்.





# புண்ணிய பூமிப் படலம்

வீரரின் அன்னை, ஞான விளக்கொளி பரவு கின்ற
பாரினுக் கன்னை, பொன்செய் பசுவளத் திருவின் ஓங்கும்
சீரினுக் கன்னை, செங்கோற் செழிப்பினுக் கன்னை, யோக
பூரணர்க் கன்னை, எங்கள் புண்ணிய பூமி வாழ்க!

இருதொடர்க் கடலோரத்தில் இலகுகன் னியை வணங்கப்
பருவதப் படிக ளேறிப் பனிவரை வீற்றிருந்தே,
குருசிவ சக்தி யிந்தக் குவலயக் கோயி லெங்கும்
அருளர சாட்சி செய்யும் அரியணை போன்ற நாடே!

வேதமும் வாழ்வும் ஒன்றும்; வீரமும் அறமும் ஒன்றும்;
காதலும் கற்பும் ஒன்றும்; கண்ணுடன் கருணை யொன்றும்
போதமும் குணமும் ஒன்றும்; புதுமையும் பண்டும் ஒன்றும்;
நீதியும் அருளும் ஒன்றும் நெறியினிற் பெரிய நாடே!

உரிமையைப் பறிப்போ ரில்லை; உரிமையை யிழப்போ ரில்லை
சிறுமைக ளிழைப்போ ரில்லை; சீர்மையைத் துறப்போ ரில்லை
வறுமையை அழைப்போ ரில்லை; தொழிலினை மறப்போ ரில்லை
திறமைசால் அறிவும் வீறுந் திருவுட னோங்கு நாடே!

இரப்பவர் இல்லை. 'இல்லை' என்பவ ரில்லை; உள்ளங்
கரப்பவ ரில்லை; பேதங் காண்பவ ரில்லை; அன்பைத்
துறப்பவரில்லை; வஞ்சர் தொல்லையும் இல்லை. தன்னை
மறப்பவ ரில்லை. உண்மை மறுப்பவ ரில்லை மாதோ!

வீரரின் உயிரே, ஆன்ம வெற்றியின் விளக்கே, இந்தப்
பாரினுக் கெல்லா ஞானப் பரிதியே, சுருதித் தாயே!
தீரர்கள் போற்றி செய்யத் தேவர்கள் வாழ்த் தெடுக்கப்
பூரண யோக சக்தி யாகநீ பொலிக மாதோ!

காசினிக் கெல்லாந் தெய்வக் கதிரொளிக் கனலை நன்று
வீசிநீ வாழ்க! மண்ணில் விண்ணர சிலகச் செய்வாய்
மாசிலாத் தேவ மாந்தர் மரபினைப் பெற்ற தாயே!
ஆசிதா வுனது சீர்த்தி யணிகவி பொலிய வென்றும்!

# வசன மின்சாரம்

(வி. ஆர். எம். செட்டியார் B. A.)

மகாகவி ஷேக்ஸ்பியர் நடையில் ஆராய்ச்சியாளர் மூன்று பருவங்களை உணர்கிறார்கள்; முதற் பருவத்தில் கருத்தைவிடச் சொற்கள் அதிகம்; இரண்டாம் பருவத்தில் கருத்தும் சொல்லும் சமநிலை; மூன்றாம் பருவத்தில் சொல்லைவிடக் கருத்ததிகம். ‘வசனம் ஆத்மக் குழலோசை; உணர்ச்சியை நவரசங்களுடன் ஒலி பெருக்கும் நாதஸ்வரம்’ என்கிறார் வால்றர் பேடர் (Walter Pater). மனம் முதிர முதிர, ஆன்ம வளர்ச்சி ஓங்க ஓங்க, அளந்த சொல், நிறைந்த கருத்து, தெளிந்த வாக்கு உண்டாகும்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் நூல்களில் எந்தப்பக்கந் திரும்பினாலும், மேற்சொன்ன பண்பைக் காணலாம். சுவாமிஜியின் உரைநடை, வசன காவியம்; சக்திபெற்ற சொல் மின்சாரம். பண்டிதர் பாமரர் அனைவருக்கும் விளங்கும் எளிய நடை — அளந்த சொல், ஆழ்ந்த பொருள், அருட் பொலிவு, ஆவேச வேகம்கொண்ட நிறைமொழியே அடிகளின் உரைநடையாகும். அதில், வாடாத வசந்த மலர்கள்போலப் புதிய புதிய கருத்துக்கள் பூத்துப் பொலிகின்றன; அனுபவ உண்மைகள் சிற்பச் செல்வமாகச் செதுக்கப்பட்டு விளங்குகின்றன. மையின் ஆழத்தில் இரத்தம் துடிக்கிறது; சொற்கள் சிறகடிக்கின்றன. இதயாவேசம், அழகின் சிகர ஜோதி, ஞானியின் உபசாந்தம், யோகியின் ஆத்மானுபூதி, பக்தனின் பரவசம், தியாக வீரனின் சக்திக்கனல் இவையெல்லாம் சேர்ந்து அடிகளின் வாக்கை ஒரு சிருஷ்டி காவியமாக (Creative Poem) ஆக்குகின்றன. பல இடங்களில் அடிகளின் உரைநடை கவிகளாகவே அமைந்திருக்கின்றது; புதிய புதிய பழமொழிகள் மிளிர்கின்றன; அரிய உபமானங்கள் குலுங்குகின்றன; பயனுள்ள நகைச்சுவை ததும்புகின்றது. அடிகள், பல மொழிகளில் சிறந்த நூல்களை ஆராய்ந்து, தமிழ்த்தாய்க்கே அவற்றைச் சொல்லணியாகச் சூட்டியிருக்கிறார்கள். கம்பர், வள்ளுவர், தாயுமானவர், வள்ளலார், காளிதாஸன், துளஸிதாசர், தாகூர், ஷேக்ஸ்பியர், மில்றன், ஷெல்லி, வைறன், கார்லைல், றஸ்கின், எமேர்ஸன், பெர்நாட்ஷா, மோலியர், றஸீன், விக்றர் ஹியூகோ, அனதோல்ஃப்ரான்ஸ், கேத்தே, தாந்தே, ஹோமர், கோர்கி முதலியோர் உலகின் சிறந்த கவிகளும், எழுத்தாளர்களுமாவர். இவர்கள் காவியங்களிலும், வசனங்களிலும் சுவாமிகள் தெவிட்டத் தெவிட்டத் திளைத்திருக்கிறார்கள்; அடிகளின் நடையில் மேற்சொன்ன புலவர் நயங்களையெல்லாம் ஒருங்கே காணலாம். அடிகள் கவிதை தேன் அமுதம்; வசனம் சக்தி மின்சாரம்; அடிகள் நடை படிப்பவர் உள்ளத்தைத் தொட்டு, உயிரிற் கலந்து, வாழ்வில் தோய்ந்து, மனிதனைப்புனிதனாக்கவல்லது; உணர்ச்சியற்றவருக்கும் உயிர் தந்து எழுப்பக்கூடியது. அதுசோர்ந்தவருக்குத்தெளிவுதரும்; அறிவுவேட்கையுள்ளவனுக்குப்புதியபுதிய கருத்துக்களை அள்ளிஅள்ளிப்பொழியும்.





# நவரஸ நடனாஞ்ஜலி

விண்ணும் மண்ணும் ஆடரங்கம்; சுற்றிலும் இடை விடாமல், நடனக்காட்சிகள் நடக்கின்றன. இரவின் கருந்திரையைப் பிளந்து கொண்டு, மேகமார்பை ஊடுருவிப் பாய்ந்து பாய்ந்து பளிச்சிட்டு நடம் புரியும் மின்னலைப் பாருங்கள்! மின்னற் கொடிக்கு மேக கர்ச்சனை முழவு கொட்டுகிறது. சூரியன் கிழக்கே சாந்த நடனம் புரிந்து வந்து தணல் மயமாக மேற்கே குதித்து மறையும் காட்சியைக் கண்டு நம் உள்ளம் இன்பக் கூத்தாடுகிறது! காற்றுப் பாட்டுடன் கூடிக் குலாவி நடனம் புரியும் மரஞ்செடி கொடிகளைப் பாருங்கள்! காற்றின் வேகத்திற்குத் தக்கபடி பூவும், இலையும் அசைவதைப் பாருங்கள்! இலைகள், முத்திரை காட்டுவது போலவும், காற்று, வீணையை மீட்டும் விரல்கள் போலவுங் காண்கின்றன! மலையிலிருந்து அருவி தடதடவென்று படிகத்தை உருக்கி விட்டதுபோல் ஆனந்த நடனமாடி வருவதைப் பார்த்தால், நம் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடும். ஆறு, மேட்டிலும், பள்ளத்திலும் ஜதிமிதித்துச் சென்று, எல்லையற்ற கடலுடன் சேர்ந்து, அலைகளுடன் அலையாக நடம்புரியும் பிரம்மானந்தக் காட்சியைப் பாருங்கள்! கடலின் அகண்ட கீதமும், ஆவேச நடனமும் கண்ணுள்ள மட்டும் பார்த்துக்கொண்டு காதுள்ள மட்டும் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்! உலக வாழ்வே நடனந்தான்!

எல்லா உயிர்களும் இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கின்றன; துன்பம் வந்தாலும் சோகநடனமாடுகின்றன. விருப்பு, வெறுப்பு, இன்பம் இடர், கசப்பு, களிப்பு, முதலிய எந்தத் தன்மையும் ஒரு முகக்குறியால், இடுப்பு வளைவால், அங்க அசைவால் நமக்குப் புலனாகிறது. பேச்சுடன் கைவீச்சும், கால் வீச்சும், முகச்சுளிப்புகளும், இளிப்புகளும் களிப்புகளும் சேர்ந்துதான் உள்ளக் கருத்தை உணர்த்துகின்றன. உயிரே, நமது உள்ளத்தில் “பட்பட்” டென்று நடம் புரிந்து கொண்டிருக்கிறது. இரத்த நாடிகளெல்லாம் “டப் டப்” என்று நடம்புரிகின்றன. இந்த நடனம் நின்றால், மனிதர் வாழ முடியாது. ஜடயந்திரங்களும் “ஓம்” என்று சத்தமிட்டுச் சக்கரஞ் சுற்றி, மின்சாரத்தாலும் ஆவியாலும் நடனம் செய்கின்றன. படச்சுருளை ஓட்டும் மின்சாரப் பொறியைப் பாருங்கள்! ஒரு சுரங்கத்தில் தங்கங் காய்ச்சும் பெரிய யந்திரங்களின் தாண்டவத்தைப் பாருங்கள்! எந்த யந்திரமும் நடனமாடிக் கொண்டு தான் வேலை செய்கிறது. இந்தச் சீவ யந்திரத்தின் விசை இதயத்தில் நடக்கும் திருவடி நடனமே!

# புத்த ஜோதிப் படலம்

செழுந்திரு வழகன், வீரத் திருவுறு மார்பன் இன்பக்
கொழுந்தோளிர் செல்வன், இந்தக் குவலய உயிர்க ளெல்லாம்
அழுந்திருள் ஆசை வாய்ப்பட் டழுந்துயர்க் கிரங்கி யிங்கே
எழுந்தருள் புத்த ஜோதி யிறைவனைப் போற்று வோமே!

வருந்துகின்ற வறியர்பலர் வாசலண்டை
வயிறெக்கி வாடக்கண் டிரங்க மாட்டார்;
விருந்துண்பார் செல்வர்க்கே விருந்து வைப்பார்,
விறலியரின் மடிமேலே வீழ்ந்து, காலை
மருந்துண்பார்; மருந்துக்கே உடலே டுத்தார்,
மயானத்தை நோக்கியவர் வளைந்து செல்வார்;
பருந்துண்ணும் பருவுடலை நம்பேன் ஐயா,
பாரினிலே பந்தமிலாச் சுகமொன் றுண்டோ?

எனக்கென வாழ்ந்த தெல்லாம், எனதியான் என்ற தெல்லாம்,
இனத்துடன் கலந்த தெல்லாம், இகந்தரு போக மெல்லாம்,
மனத்துடன் விடுத்தேன்; மோக மாயத்தைத் துறந்து, தூய
வனத்தினில் வாய்மை கண்டு, பிறர்க்கென வாழுவேனே!

சீதவெண் குடைவிரித்த சித்திர வனத்தின் கீழே,
போதியே வீடு தாங்கப் புல்லதே இருக்கை தாங்கச்
சோதனை யற்ற சாந்தத் துறவொளி யுள்ளந் தாங்க,
மேதினிக் கன்பு மேவும் விமலனுந் தியானஞ் செய்தான்!

திங்களோ டமைதி யாகித் தினகர னுதித்த போது,
மங்கள ஞானம் பெற்ற மகாதவ யோகி புத்தன்,
பொங்கிய கருணை வெள்ளம் புசித்துயிர் உலகம் அன்புச்
சங்கமாய் வாழத் தர்ம சாதனத் தொண்டு செய்தான்!

அரசமென் றரசை நீத்தோன், அரசுவீற் றிருந்து, ஞான
அரசனாய், அரசர் போற்றும் அரசருக் கரச னாகி,
நரசகோ தரர்க ளுய்ய நலிவறு தொண்டு செய்த
வரன், அறச் செல்வன் வாமன் மாசறு புத்தன் வாழ்க!





# நாவலர் பெருமான்

சென்ற நூற்றாண்டு பல பெரியாரைக் கண்டது; அவருள் சமய தீபமாக விளங்கியோர் இருவர்: வடக்கே தயானந்தர் (1824—1883); தெற்கே நாவலர் (1822—1879). இருவரும் வந்திராவிடில், வேதாகமங்கள் வேருடன் மறைந்திருக்கும். தயானந்தர் தூயவேத நெறியை விளக்கினார். நாவலர் தூய சைவ நெறியைத் துலக்கினார். இருவரும் பிரமசாரிகள்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; காலத்தையும் ஞாலத்தையும் அறிந்து சிறந்தவர்கள்; உரமான பேச்சாளர்; அஞ்சா நெஞ்சுரங்கொண்டு போலி ஒழுக்கங்களை உள்ளும் புறமும் கண்டித்தவர்கள். தயானந்தர் சத்யார்த்தப் பிரகாசம் எழுதினார்; வேதத்திற்கு முன்னுரை தீட்டினார். நாவலர் அரிய பெரிய நூல்களை யாத்தளித்தார்; வேதவியாசர்போலப் பழஞ் செல்வங்களைத் தொகுத்தளித்தார். தயானந்தர் வேதக்கலை பரவ ஆரிய சமாஜம் கண்டார். நாவலர் சைவ சமாஜம் கண்டார்.

ஆறுமுக நாவலர் செய்த சிவபுண்ணியம் ஒப்புயர்வற்றதாகும் அவர் வேதத்தையும் ஆதரித்தார்; ஆகமத்தையும் போற்றினார்; அரு, உரு, குரு ஆகிய மூன்று தெய்வ விளக்கத்தையும் மதித்தார். சிவாகமத்திற்கு மாறானதைக் கண்டித்தார். முதன்மையாக அக்காலம் படர்ந்துவந்த போலிக் கிறிஸ்துவத்தையே அவர் தக்க ஆதாரங்காட்டி மறுத்தார். அவர் காட்டும் ஆதாரங்களை எதிரிகளும் மறுக்க முடியாது...........நாவலர் தமிழுக்கும் தமிழருக்கும், தமிழகத்திற்கும், செய்த தொண்டு அளப்பரிது. இனிய உரைநடை வகுத்த புலவர் அவரே. அவர் உள்ளம் 'தமிழ், சைவம்' என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை; செல்வச் செருக்கைக் கெஞ்சவில்லை; பட்டம் பதவிகளை வேண்டவில்லை; அவர் தலை நிமிர்ந்து நடந்தார்; சிவத்தையே மதித்தார். உண்மையை உண்மை என்றார்; பொய்யைப் பொய் யென்றார். தமிழின் பெருமையை நாட்டினார். சைவத்தின் மேன்மையை நடந்து காட்டினார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வந்திராவிட்டால், சைவசமயமே மறைந்திருக்கும்; அவர்களுக்குப் பின்வந்து சைவசமயத்தைக் காத்தவர் நாவலர் பெருமானே.

நற்றமிழ்க் குரிசிலான நாவலன் வாழ்வைப் பாரீர்!
கற்றவன் புரிந்த செஞ்சோற் கனிதமிழ் தொண்டைக்காணீர்!
பெற்றநந் தாயின் வீரப் பெருமையை நிலைநிறுத்த
முற்றிய காதலோடு முத்தமிழ் முழக்கஞ் செய்வீர்!

# புதுயுகக் கவி

இசைப்புலவர், ஜே. வேங்கடராம ஐயர்

“விரிந்த இசைச் சிறகால் மனிதான்மா விண்ணிற் பறக்கும்போது மண்ணுலகாட்சி அத்துடன் நிற்கிறது; மானவன் வானவனாகிறான். தெய்வத் தன்மை பெறுகிறான்” என்கிறார் பெதோவன் (Beethhovan) என்னும் இசைக்கவி. அவர், பாட்டில் இன்பங் கண்டார்.

சுவாமி சுத்தானந்தர் வாழ்வே பாட்டாறுதான். இவர் பாட்டு ஞானானந்த உள்ளத்தில் பொங்கி எழுந்தது. ஓவியமும் காவியமும் எண்ணவுருக்கள்; பாட்டும் பரதமும் அவ்வெண்ணத்தின் புறவிளக்கங்கள். இவற்றையே ‘கலை’ என்கிறோம். உள்ளெழுந்த ஆத்ம பாவனைகளே கவியுருக்கொள்கின்றன. அவை ஆழ்ந்த இசைக் கனவுகள். “கனவே, கவிக்கினிய காதலியே” என்று இவர் பாடுகிறார்.

சுத்தானந்தர் சிறுவயது முதல் யோகத்தில் ஈடுபட்டவர்; கடவுளருளில் வாழ்ந்தவர்; தெய்வ சக்தியருளால் கவிமலர்ச்சி பெற்றவர் ...... இவர் பாடல்களில் இயற்கையின்பமும், துறவின் தூய்மையும், தவத்தின் கனலும், மௌனத்தின் மாண்பும், இனிய இசையின்பமும், சங்கீத லக்ஷணங்களும், உயர்ந்த பொருளும், அருளும், நிலையான பயனும் ஒருங்கே காணப்படுகின்றன; சிறந்த ஆத்மானுபவங்கள் விளங்குகின்றன. இந்தப் பாட்டைப் பாருங்கள்:-

“வான்கண்ட பயிர்போல் மழைகண்ட மயில்போல்,
மதுவனம் கண்டவண் டினம்போல்;
ஊன்கண்ட உயிரில் உன்னையே கண்டுள்
உவந்திடும் உவப்பெனக் கருளாய்;
தேன்கண்ட தமிழிற் செப்பியுன் புகழைச்
செகமெலாம் திருவருள் ஆட்சி
நான்கண்டு குளிர நாடினேன், என்னை
நடத்திடேல் எப்படி உய்வேன்?”.

அருள் வாக்கு, அருட் செயல், அருள் வாழ்க்கை, அருளாட்சி, அருளின்பம் — இவையே கவியின் நோக்கம். இவற்றையும் ‘நான் எனது’ என்ற அகங்காரமின்றி, இறைவனருளாலேயே பெற முறையிடுகிறார் கவி.





# பகவத் கீதைப் படலம்

—::—

## அழிவறும் ஆன்மா

பாசத்தால் என் பணிமறுக் காதே,
பாய்ந்து போர்செய் பகைவர் நடுங்க!
வீசு வெங்கணை! வெற்றி யுனக்கே,
வீரர் தம்வினை செய்திடக் கூசார்,
நாச மாவது நாறுடற் சட்டை;
நன்று வாழ்வது போன்றறும் ஆன்மா,
மாசி லாதது; வாளுக்கும் தீக்கும்
வணங்கிடாதது வாழ்விற் குயிராம்.

## சமத்துவ யோகம்

வெற்றி தோல்வி, விருப்பு வெறுப்பு,
வெண்மை தண்மை விகற்பங்க ளின்றிப்
பற்று நீங்கிப் பலன்விழை வின்றிப்
பழுதறப் பணி செய்வது யோகம்;
முற்றும் உள்ளச் சமத்துவம் யோகம்.
மூளையைக் கலக்கும் புல னைந்தைச்
செற்றுச் சுற்று மனத்தைச் செயித்தே
சேம நல்லறஞ் செய்பவர் மேலோர்

## நிலைத்த ஞானி

ஆசை யச்சம் அகந்தையைப் போக்கி,
ஆமை போற்புலன் ஐந்தும் அடக்கிப்
பாச மோகப் படர்சினம் விட்டுப்
பகைநட் பின்றிப் பகலிர வின்றி,
மாசி லாத மனத்தெளி வுற்றோன்,
மாறி லாதமர் மாகடல் போன்றோன்.
பேச லில்லா நிலைபெறு ஞானி.
பேரிய மோனி பிறப்பிறப் பில்லான்.

## வினை செய் ஞானி

இந்த ஞானங்கை வந்த புலவன்,
ஏது செய்யினுந் தீதுற மாட்டான்;
சந்த தமுஞ் சமநிலை நின்றே
தன்ன றத்தினைத் தாங்கிடுந் தீரன்;
பந்த மற்ற சுதந்தர னாகப்
பாரி லேயவன் சீர்வினை செய்வான்.
அந்த மாதி யிலாதுள் ளமரும்
ஆன்ம சத்துவம் தானேன் றறிவான்.

### அருமை அன்பன்

கருத ரிய கடவுளைக் கண்டோன்,
கா ணுயிர்கள் அதுமய மேன்போன்,
இருமை, அச்சம், பகைசெருக் கற்றோன்,
இன்ன லின்றி எவர்க்கும் இனியன்,
கருணை நேயன் சமநிலைச் சாந்தன்,
கலங் கிடாமனத் தூயன் விதேயன்,
அரு ளமைதி யறிவொளிர் யோகி,
அருமை யன்பன் அவனெனக் காவான்.

### சரண் புகுவாய்

இன்னுயிரின் இதயத்தில் இறைவன் உள்ளான்,
எல்லாந்தன் மாயையினால் இயங்கச் செய்வான்,
அன்னவனுக் காளாவாய்; அருள்பா லிப்பான்,
அச்சமிலை, இடரில்லை, அழிவு மில்லை,
என்மனத்தன், என்னன்பன், எனைப்பூ சிப்போன்,
என்மயனா வான்; யானே அவனுள் வாழ்வேன்,
சொன்மனத்தைக் கடந்தசுகப் பொருளாம் என்னைத்
தூயசரண் புகுந்தின்பந் துலங்கு வாயே!

## இரண்டு அற்புத நூல்கள்.

**ந**மது நாட்டின் பெருமை, இரண்டு அற்புத நூல்களால் உலகளாவியது; ஒன்று கண்ணன் **கீதை;** மற்றொன்று வள்ளுவர் **குறள்; கீதை** போர்க்களத்தில் விசயன் சோர்வை யகற்றி, வீரப்பணியைக் கடவுட் பணியாகச் செய்யத் தூண்டியது; கண்ணன் விசயனுக்குச் சொன்னது; விசயன் கேட்டது; வியாசர் கவிதையாகத் தொகுத்து உலகிற்கு வழங்கியது. **குறள்,** எளிய, தூய, இல்லற முனிவரொருவரால், அமைதியாக, நீண்ட அனுபவங் கொண்டு இயற்றியருளப் பெற்றது. ஈரடிகளால் ஆன இந்த இரண்டும் இறைவனடி பற்றிய அறவழி வாழ்வையே விளக்குகின்றன.

( திருக்குறள் இன்பம் முன்னுரையிலிருந்து )





# சக்தியைப் பெறும் வழி.

(சுவாமி சித்பவானந்தர்)

முற்றொடர்ச்சி

உண்டும் உடுத்தும் உறங்கியும் இனம் பெருக்கியும் வாழும் வாழ்க்கை ஆறறிவுடைய மக்களது வாழ்க்கையாகாது. ஐயறிவுடைய மக்கட்குரிய வாழ்க்கையே யாகும். வாழ்வாவது நமக்கு வாய்த்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் என்ற நினைவு நமது உள்ளத்து ஊன்றிப் பதிந்து நிலையாகக் குடியிருத்தல் வேண்டும். வாழ்விற் குள்ளும் இளமை யென்பது ஒரு பொன்னனைய மாமணியனைய சந்தர்ப்பம் என்பது தெளியப்படல் வேண்டும். வாழ்க்கையாகிய சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் உயர்ந்த நலன் விளையுமாறு பயன் படுத்திக்கொள்ளல் வேண்டும். "தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற்றோன்றாமை நன்று." நிலவுலகத்திற்கு ஒரு பெரும் பாரமாக வாழ்வதினும் புகழ் விளையும்படியான ஒரு நெறியைப் பின்பற்றி வாழ்தலே நன்று. புகழைப் பொருட்படுத்தாவிடினும், பெரும் புகழைப் படைக்க விரும்பினோர் போன்று சலியாது முயற்சியில் ஈடுபடல் வேண்டும். சுருங்கக் கூறின், வாழ்க்கையைப் பயன் படுத்த விரும்புபவன் தன்னால் அடைதற்குரிய ஒரு குறிக்கோளை, ஒரு இலக்ஷியத்தை, அகக்கண்ணுக்கு முன்னே நிலைநாட்டிக் கொள்ளல் வேண்டும்.

பிறப்பும் இறப்பும் ஒரு நோக்கமுமின்றி நடைபெற்று வரும் செயல்களல்ல. யாதொரு நோக்கமுமின்றி விளையாடும் ஒரு குழந்தையின் விளையாட்டனையதல்ல இவ் வாழ்க்கை. ஒழுங்கற்ற, ஒன்றோடொன்று முரண்பட்ட, பலவகைப்பட்ட இயற்கைச் சக்திகளுக்கு வசப்பட்டு, ஆழித்துரும்பு போல, அங்குமிங்கும் ஊசலாடிக் குறிப்பிலாது திரிதலே வாழ்க்கை யென்பதும் தவறாகும். நமது ஆன்மாவினிடத்துப் புதைந்து கிடக்கும் வரம்பிலா ஆற்றலை வெளிப்படுத்த முயலுவதே வாழ்க்கையின் நோக்கம். இந்நோக்கத்தினை அறிந்து, அதற்கியைய நமது முயற்சிகளை அமைத்துக் கொள்ளுதலே, சுருங்கிய காலத்திற்குள் மிகுந்த பயனை அடையும் வழியாகும். வாழ்க்கையெனும் ஆறு ஓடிக்கொண்டிருக்கும் நெறியை எம் மனிதனாலும் மாற்ற ஒண்ணாது. அந்நெறியில் வாழ்க்கையை ஓடச் செய்யும் பெருஞ்சக்தி எம்மனிதனையும் தன்னிச்சைப்படியே ஆட்டுவித்துக் கொண்டு செல்லும். வாழ்க்கையின் நோக்கத்திற்கு முரணாக ஒழுக நினைப்பவன் தனக்குப் பெருந் துயரத்தையும் ஏமாற்றத்தையும் அடைவதோடு பின் சென்று கொண்டே போய், முடி-

வில் முன் செல்லும்படியாக உந்தப்படுகிறான். முற்கூறிய வாழ்க்கையின் நோக்கமே நம்மால் வெல்லுதற்கரிய பேறுழாகும். இதைத் தவிர்த்து நாம் 'எனது ஊழ்' என்றும் 'பாழ் விதி' யென்றும் மனங்கலுழ்ந்து கூறும் ஊழ் முழுவதும் வெல்லுதற்கு முடியாத தொன்றல்ல. முன்னதாகிய பேரூழ் ஈசனது படைப்பு எனப்படலாம். பின்னது மனிதப் படைப்பாதலின், மனிதனால் அழித்தற் குரியதாம். "உலையா முயற்சி களைகணா, ஊழின் வலிசிந்தும் வன்மையும் உண்டே" என்பர் மெய்யுணர்ந்தார். (களைகண்—பற்றுக்கோடு) நாமாகப் படைத்துக் கொண்ட ஊழை நாமாக அழிக்கவும், மாற்றவும் கூடும். நினைவு என்பது ஒரு பெருஞ் சக்தியாகும்; அதை நாம் தவறான வழியிற் பயன்படுத்தி நம்மை நாமே பந்தத்திற்கு ஆளாக்கிக் கொண்டோம். அதே நினைவை இனி நாம் நல் வழியிற் பயன் படுத்துவோமாயின், நம்மைக் கட்டுகளினின்று விடுவித்துக் கொள்ளலாகும்.

நினைவு எனும் விதையே ஆசையெனும் நீரை உணவாகக் கொண்டு, செயலாக முளைக்கிறது. செயல் முளையே நாளடைவில் வழக்கமென்னும் சிறிய செடியாகி, குணமெனும் மரமாக வளர்ந்து விதியெனும் கனியினை நல்குகின்றது. ஆதலின், அஞ்ச வேண்டுவதில்லை. "தன்னாலேயே தீது நீங்கப் படுகின்றது. மெய்யுணர்ந்தார் நெறியை மட்டும் காட்டுவார்" என்றார் ஸ்ரீ புத்தபகவான். நாமே நமது வேதத்தினால் நன்னெறியின் மேம்பாட்டினை உணர்ந்து, அதன் வழியே துணிந்து செல்லுதல் வேண்டும். நமது வாழ்க்கையெனும் தோணியை நாமே ஓட்டுதல் வேண்டும். நாம் பிறப்பதும் தனியாகத்தான், நாம் இறப்பதும் தனியாகத்தான், நாம் வாழ்வதும் தனியாகத்தான். ஒருவன் சுகமாக வாழ்க்கையில் நினைத்தவாறெல்லாம் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் போதே, திடீரென்று ஓரமயம் தனக்குள்ளே, "நான் வந்த காரியம் என்ன? நான் யார்? இவ் வாழ்க்கை எதற்காக? இதன் முடிபென்ன?" என்று சிந்திக்கத் தொடங்குகிறான். "நமது வாழ்க்கையெனும் வலையை நாமே பின்னி வருகிறோம். அப்பொறுப்பு நம்மையே சார்கின்றது. நாமே நமது வாழ்க்கையைத் திருத்தியமைக்க முற்படவேண்டும்," என்ற உணர்ச்சி பிறக்கிறது. அப்போதே பிறவியெடுத்ததின் பண்பையும் பயனையும் உணர்கின்றான். அன்றே அவன் புதிய பிறவி எய்துகின்றான். அதுவரை கழித்த நாளெல்லாம் உண்மையிற் பிறவா நாளே.

## ஒரு இலக்ஷியத்தின் அவசியம்.

வாழ்க்கையின் பெருமையையும் அதில் அடங்கிய நோக்கத்தையும் உணர்ந்தவன் வாழ்க்கையெனும் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டின், மிக உயர்ந்த குறிக்கோள் ஒன்றை (ஒரு லக்ஷியத்தை)த் தெரிந்தெடுத்து அகக்கண் முன்னே நிலைநாட்டிக் கொள்ளல் வேண்டும். அறிவு, இறைவன் மீதுள்ள அன்பு, தன்னை யடக்கி யாளும் ஆற்றல், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் இந் நான்கினில் யாதேனும்



ஒன்றை மிகவுயர்ந்த அளவிற்குப் பெருக்கிக்கொண்டு போதலையே குறிப்பாகக் கருதி, அத்துறையில் மிக்க தேர்ச்சி பெற்ற ஒரு பெரியாரது வாழ்க்கையையே முன் மாதிரியாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். அறிவுக் கலையிற் பயிற்சி பெறுதலிலோ அழகுக் கலையிற் (ஓவியம் சிற்பம் சங்கீதம் போன்றன) பயிற்சி பெறுதலிலோ ஒரு தொழிற் கலையிற் பயிற்சி பெறுதலிலோ நமக்கு எத்துறையில் உண்மையான நாட்டம் உள்ளது என்பதைக் கூர்ந்து நோக்கி யறிந்து, அதை நன்கு பற்றிக் கொள்ளல் வேண்டும். பிறரைப் பார்த்து அங்ஙனமே நடிக்கும் அசையை விட்டு விட்டு நமக்கு உண்மையாக உள்ளூர உண்டாகும் விழைவையறிந்து அதற்கு இசைந்த ஒரு குறிக்கோளை நாடிக்கொள்ளல் வேண்டும். "ஆகாயத்தைக் குறியாக வைத்துக்கொண்டு எய்பவன் ஒரு மரத்தைக் காட்டிலும் உயர்ந்த ஒரு பொருளை எய்வது உறுதி" யென்பது பழமொழி; ஆதலின், மிக உயர்ந்த குறிக்கோளே சாலச் சிறந்ததாகும். அத்தகைய உயர்ந்த குறிக்கோளை நம்மால் எய்துதற்கு இயலுமோ என்ற ஐயத்தை அறவே விட்டுவிடுதலே முறை. மனத்தளர்ச்சிக்கு இடங்கொடுத்தல் தகாது; பெரும் முயற்சியாலும் ஊக்கத்தாலும், பெறற்கரிய பேறு உலகில் ஒன்றும் இல்லையென்ற துணிவே வேண்டும். ஒரு பிறப்பில் நாம் கொண்ட குறிக்கோளை எய்தாவிடினும், அதனை அடையும் வரை மீண்டும் மீண்டும் பிறவிதோறும் முயல்வோம் என்ற உறுதி வேண்டும். "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைப்பு" என்றார் நாயனார். ஆதலின் பட்டபாடு ஒரு சிறிதும் வீணாகாது என்று அகமகிழ்தல் வேண்டும், பொருட் செல்வம், கல்விச் செல்வம், ஞானச் செல்வம் இம் மூன்றில் எதைத் தேடினும், நமக்குப் பயன் படுத்துவதோடு பிறர்க்கும் பயன் படுத்தும் ஆசையையும் வளர்த்து வருதல் வேண்டும். அறிவைப் பெருக்க விரும்புவார் வரம்பிலாத அறிவுப் பேற்றை நாடுதலையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும்; அங்ஙனமே அன்பை இறைவன்மீதோ மன்னுயிர்மீதோ செலுத்த விழைவோர் வரம்பிலாத அன்புப் பேரூற்றுத் தம்முள்ளத்துத் தென்படும் வரை வளர்க்கும் குறிப்புடையராதல் வேண்டும்; தன்னடக்கத்தை நாடுவோர் நினைத்தவுடனே உடலையும் உள்ளத்தையும் நினைத்தவாறெல்லாம் அடக்கும் ஒரு பரமயோகியை இலக்ஷியமாகக் கோர வேண்டும். சுருங்கக் கூறின், வரம்பிலாத சத்திக்கு மூலமும் உறைவிடமும் நம் உள்ளத்தினுள்ளே இருப்பதை உணர்தலையே நமது முடிவாகக் கருதல் வேண்டும். இது வாழ்க்கையின் எல்லாத் துறைகட்கும் பொதுவாகும்.

(தொடரும்)

---

**சிவாஜியின் வீரவுரை**

"அறத்தினைக் காத்தராமன் அவதரித் திருந்த நாட்டில்
கரத்தினைக் கட்டி வாழேன், கருமவீ ரத்திற் கேன்றே,
வரத்தினைப் பெற்ற வீர மாருதி போல வெற்றிச்
சிரத்தினை யுயர்த்தியேநான் சிங்கம்போல் நடப்பே"னென்றான்.

---



## சித்தாந்த முழக்கம்

அவனரு ளாலே அவனருள் பெற்றே
வான்புவி மக்கள் வரிசையாக் கூடிச்
சீவனில் இன்பச் சின்மயம் விளங்க,
ஒன்றே குலமும் ஒருவனே கடவுளும்
என்றே உணர்த்தி நன்றே செய்யும்
சித்தாந்த முழக்கம் செய்குவோம் வாரீர்!
உள்ளே சிவமும் உலகிலே தொண்டும்
கொண்டு விளங்கிய குருமார் வாழ்கவே!
அப்பர், சுந்தரர், ஆளுடைப் பிள்ளை
மாணிக்க வாசகர் வள்ளுவர் மூலர்,
பட்டின ஞானி பரஞ்சோதி முனிவர்
தாயு மானுர் சத்திய தரிசி
அருண கிரியார் அருட்பாச் சித்தர்
சிவப் பிரகாசர் தெளிவுறக் கண்ட
தூயமெய் யின்பந் தொல்லுல கும்பெறச்
சித்தாந்த முழக்கம் செய்குவோம் வாரீர்!

### ஆதி முதல்வன்

ஆதி முதல்வன் அருட் பெருஞ் சிவமே
அவனே பரமன் அவனே பசுபதி
அவன் அவள் அதுவென ஆடிச் செல்லும்
பாருயி ரெல்லாம் பரமன் உறையுளே.
ஆற்றைப் பார்த்தால் ஊற்றை நினைப்போம்
ஊற்ருல் மழையை உயிர் வானத்தை
நினைப்பது போலே, நிலவுயிர் கண்டே
பரமன் உண்மையைப் பண்பர் அறிவரே
ஆருயிர் வாழும் ஆதார மான
பஞ்ச பூதங்களும் பரிதியும் மதியும்,
ஆன்மா தானும் அரன்வடி வாமே
உள்ளந் தோறும் உயிர்க்குயி ராக
உள்ள பொருளே உயர் பெருஞ் சிவமாம்
மெய்யறி வின்பத் துய்ய பொருளதை
உலகெலாம் ஓதி யுணர்ந்திடத் தகுமே.



### எல்லாம் சிவமயம்

எல்லாம் சிவமயம் என்னும் உண்மை
வல்லோர் கண்ட வாய்மையா கும்மே.
பரமனை யன்றிப் பாருல கிலையே,
உயிரில் லாமல் உடலா டாதே,
சிவமில் லாமற் சீவனு டாதே,
காற்று மேகம் கணக்கறு மீன்கள்
அனைத்திற் கும்வான் ஆதார மாமே
அவனிக் கெல்லாம் சிவனு தாரமே.
வளர்பயிர் தாங்கும் மண்ணைப் போலே
பரமன் இந்தப் பாருல கனைத்தையும்
தாங்கி யெதிலும் தாக்கற் றிருப்பனே.

## தமிழ் கவிதையின் பண்பும் சுத்தானந்தரும்

(கம்பன் கலைவாணர். டி. கே. சி.)

தாகூர் பிற பாஷைகளைக் கற்றுத் தம் பாஷைக்கு உரமாக்கிக் கொண்டார். தம் பாஷையையே அனுபவித்தார். மற்ற பாஷைகளின் நயங்களை அனுபவிக்கத் தமக்கு முடியவில்லையென்று, இலேசாகச் சொல்லவில்லை; பறையடித்த முறையில் சொன்னுர்

நம்முடைய இதயம் பழுக்கவேண்டும் என்ருல், ஆங்கிலம் அவ்வள வாக உதவாது; வங்காளி பாஷையும் அவ்வளவாக உதவி புரிந்து விடாது; தமிழ்ப்பாஷை ஒன்றுதான் உதவிசெய்யும் என்று தாகூரோடு ஓட்டிப் பேரம் பண்ணுமல் சொல்ல வேண்டும்.

சுவாமி சுத்தானந்த பாரதிகள், இதர பாஷைகள் பல கற்றிருந்த போதிலும், தமிழும் தமிழ்ப் பண்பாடுமே நமக்கு உறுதி தருவது என்று கண்டு, நெடுகிலும் தமிழுக்குத் தீவிரமான தொண்டு செய்து வருகிருர்கள். தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் கேவலமாய் மதிக்கிற காலத்திலேயும், இடத்திலேயுந்தான், யாதொரு சோர்வும் இன்றிச் சதா தமிழ்க் கொடியை உயர்த்திப் பறக்க விட்டுக்கொண்டிருக்கிருர்கள். தமிழ் வசனத்தாலும் ஆவேச அருட்கவிகளாலும் தம் அனுபவத்தையும் நோக்கத்தையும் இடைவிடாது எழுதிப் பிரசாரம் செய்வதற்கு அவர்களிடம் அளவற்ற யோகசித்தி நிரம்பியுள்ளது. அவர்கள் வெளியிட்டுள்ள செய்யுள்கள் பல்லாயிரக் கணக்காக இருக்கின்றன. வசனங்கள் மிகப்பல.

நம்முடைய முன்னேர்கள் சொல்லியுள்ள உண்மைகள் சுவாமிகளின் இதயத்தை அப்படியே பற்றிக்கொண்டன. தமிழ்க் கவிதையின் பண்பு காரணமாகவே, அவர் எளிதில் கவிதைகளைப் பாடிவிடுகிருர். உணர்ச்சியோ உள்ளத்தில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது; சில சமயங்களில் சுடர்ப் பொறிகளாய் வெளிவந்து நம் கண்முன் தோன்றுகின்றது.

சுவாமிகளின் கவிதைச் சிறப்பு தமிழுக்கே பெருமை தருவதாகும்! அது தமிழின் முதுமைக்கும் இளமைக்கும் ஜீவ நாடி போன்றது.



# கிறிஸ்து ஜோதிப் படலம்.

தேசு லாவுந் தியாகத் திருவினன்,
பேசுஞ் சொல்லைச் செயல்பெறப் பேணினான்,
ஏசு நாதன் இணையறு வாழ்வினை,
மாசி லாத மனமுறக் கேண்மினோ!

✲ ✲ ✲

பூவியற் புரைகள் போகப் புண்ணியம் புரிந்த நாதன்
தேவியற் குணத்தால், வெய்ய தீமையே தொழிலாய்ச் செய்த
பாவியர் தமக்கும் அன்பன்; பரிவருள் கமலக் கண்ணன்,
ஆவியைப் பறிகொடுத்தான் அறநெறி சிறக்க மன்னோ!

✲ ✲ ✲

அருந்திறல் ஆகும் ஆத்ம சக்தியால் அவதரித்தோன்,
பெருந்தவச் சுடரே யானோன், பேரின்பப் புலவர் உள்ளம்
பொருந்திய கிழக்கிற் பூத்துப் பூவெங்கும் பரம ஞான
மருந்தெனப் பரவுந் தெய்வ மணங்கமழ் வாழ்வினானே!

✲ ✲ ✲

நசைதரு செல்வ வாழ்க்கை நாடக மெல்லாம் ஆடி,
வசைதருங் கனவு போல மறையுமென் றறிந்த ஞானி,
இசைதரும் புகழினுக்கும் இன்னல் செய் பகைவருக்கும்,
அசைவறக் கலங்கிடாமல் அருட்பணி புரிந்தான் மன்னோ!

✲ ✲ ✲

பேதுரு மறுத்தான், இன்னோன் பெயரையும் அறியேன் என்று.
சாதுவை விட்டுச் சீடர் சங்கமுங் கலைந்த தம்மா!
பாதகப் பணத்தை வீசி யூதசும் பதறி மாய்ந்தான்.
தீதெலாம் பொறுத்தான் ஏசு; தேசத்தார் கொடுமை யென்னே!

✲ ✲ ✲

ஆண்டவன் அருளை நம்பி, அகந்தையைச் சிலுவை யிட்டு,
மூண்டெழும் அன்பினாலே மூதுல கெல்லாம் உய்ய
வேண்டிய பணிகள் செய்து, வித்தையும் தொழிலு நாட்டி
நீண்டிசை பெற்றார் தொண்டர் நிமலனின் பெயரினாலே!

✲ ✲ ✲

எத்தனை கல்வி மன்றம்! எத்தனை தொழிலகங்கள்!
எத்தனை மருந்துச் சாலை! எத்தனை திரு மடங்கள்!
எத்தனை சர்ச் சினங்கள்! இரண்டுநூ றாண்டின் பின்னர்!
எத்தனை தொண்டர் கூட்டம் ஏசுவின் பேரால் அம்மா!



# சிலம்புச் செல்வம்.

வள்ளுவர். இளங்கோ, கம்பர்- இம்மூவரும் நமது தமிழ்த்தாய் உலகிற்கீந்த மூன்று கவியரசர் ஆவர். இவர் தமிழரசியின் செங்கோலும், அரியணையும், பொன் முடியும் போல்வர். உலகுள்ள மட்டும் தமிழை வாழவைக்கும் உயிர் நாடிகள் போன்றவர் இப்புலவர். வள்ளுவர், வையத்தில் வாழ்வாங்கு வாழும் அறம் பொருளின்ப வழிகளைத் துலக்கினார். இளங்கோ, அவ்வழிகளில் நடக்கும் ஆருயிர் வாழ்வின் இன்ப துன்பங்களைச் சொல்லோவியமாக விளக்கினார். கம்பர் வாழ்வுக் கலையில் ஒரு தெய்வ ஒளியை வீசி, அரக்கத் தன்மையை நீறாக்கும் தருமவீரக் கனலைத் தூண்டினார். வள்ளுவர், வாழ்வின் இலக்கணத்தைச் செய்தார். மற்றிருவரும், வாழ்வின் இலக்கியத்தைச் செய்தனர். இளங்கோ, பெண்ணின் பெருமையை விளக்கினார். கம்பர் பெண்ணின் பெருமையைக் காக்கும் வீறு பெற்ற ஆண்மையைத் துலக்கினார். இம்மூன்று கவியரசரும், நமக்கு வற்றாக் கலைச் செல்வத்தை வழங்கி யிருக்கின்றனர்.

இளங்கோ அடிகள் வழங்கிய செல்வம், நாகரிகவுலகில். தமிழரின் உரிமையைக் காக்கும் தனிப்பெருஞ் செல்வமாம்; அதுவே ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் அடைந்திருந்த சீர்மையைத் துலக்கும் சிலப்பதிகாரச் செல்வம். இலக்கிய வுலகிற் சிறந்த வரலாற்றுக் காப்பியம் சிலப்பதிகாரமேயாம். ஷேக்ஸ்பியரின் நாடகப் புலமையும், காளிதாசனது காவியப் புலமையும், ஹோமரின் வீரச் சுவையும், தாந்தேயின் (Dante) காதற் சுவையும், கெத்தேயின் (Goethe) சொல்லினிமையும், விர்ஜிலின் (Virgil) பொருட் செறிவையும் ஒருங்கே கொண்ட உயர் நடைக் காப்பியம் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமாகும். குறளைப் போலவே சிலப்பதிகாரமும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் தன்னகங் கொண்டது; அதன் தொடர்நிலைக் காப்பியமான மணிமேகலையில், நான்காவதாகிய வீடு பேறு விளக்கப்படுகிறது. சிலப்பதிகாரம், சொல்லும், பொருளும் இசையும் இன்பமும் அணிந்த காப்பிய மணியாயிருப்பதுடன், பழந் தமிழரின் ஒப்பற்ற அறவாழ்வையும், வீரத்திறனையும், அருங்கலைச் சிறப்பையும், தொழிலாற்றலையும், வாணிபப் பெருக்கத்தையும், அரசியல் மாண்பையும் சமரச உணர்வையும், தமிழ்ப் பெண்டிரின் மதிப்பொலிவையும், கற்புக்கனலையும் நேர் நின்று விளக்கும் இதிகாசமாகவும் நிலவுகிறது. பழந்தமிழர் பெருமையை உலகம் அறிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமே போதும். சிலப்பதிகாரத்தைப் படிக்குங் கால், நிகழ்காலத்தை மறந்து, கி. பி, இரண்டாவது நூற்றாண்டாகிய கடைச்சங்க காலத்திற்குப் போய்விடுகிறோம்.

# அல்குரான் படலம்

பாமர மக்களை ஏமாற்றி வந்த
பலவுருத் தொழுகையைப் பலமாய்த் தகர்த்தே
ஒன்றே இறைவன், உருவிலான், எங்கும்
உள்ளவன், எல்லாம் வல்லவ னென்றே
உரைத்து மாந்தரைத் திருத்திய பெருமை
முஹம்மது நபியின் முதற்பெரும் பெருமையாம்.
பிரிந்து வாழ்ந்த பேய்மனச் சாதியைச்
சேர்ந்து வாழச் செய்தவர் அவரே.
அரபிநாட் டிற்குச் சுரபியாய் வந்த
குரான் சாரத்தைக் குறிப்பேன் கேளீர்:—
ஆண்டவன் ஒருவன் அவனே பரம்பொருள்
ஈண்டவ னுக்கிணை எதுவுமே யில்லை.
அவனையே தொழுமின் அல்லும் பகலும்,
அவனைக் கலத்தலே ஆத்துமா னந்தம்.
முதல்வனை யெண்ணி முழுதுந் தெளிந்த
இதய சாந்தமே இஸ்லாம் ஆகும்.
எனதியான் என்னும் இறுமாப் பொழிமின்.
மறவா தவனை மனதி லிருத்துமின்
குலைவற நம்புமின் குன்றும் வணங்கும்,
மலைவறப் பணிமின் மாதே வனையே!
காற்றும் கடலும் கதிரும் மழையும்,
ஊற்றும் பயிரும் உயிரும் உலகும்,
அவனருள் விரிவாம், அவனுயிர்க் குயிரோன்.
அவனை மறத்தலே அனைத்தினுந் தீதாம்.
அவனை நினைத்தலே அனைத்தினு மேலாம்.
அகந்தை, காமம், அச்சம் பொறாமை
சுகந்தனைத் தேய்க்குந் துயர்க்குல மாகும்.
குடியுங் களவும் கொலையும் கூத்தியும்,
சழக்கும் வழக்கும் சைத்தான் வேலையாம்
அன்பு செய்வதே ஆண்டவன் கட்டளை.
உலகிற் கெல்லாம் பலபய னாகும்
அருட்பணி செய்பவன் அல்லா பக்தன்.
பலருக் கவனாற் பயன்மிக வாமே,
அவனை அல்லா அன்புடன் காப்பார்.



# அருண ஜோதிப் படலம்



### ரமணர் வரலாறு

அழகிய பாண்டி நாட்டில் அழகுடன் அழகு பெற்றான்,
மழவிடை யேறு மண்ணல் வாழுறு மதுரை தன்னில்,
பழம்பெரும் பக்குவத்தாற் பாரினைத் துறந்து, சித்தி
வழங்கிடும் அருண ஜோதி மலைக்குகை புகுந்து நோற்றான்!

மோனமாய் நானா ரென்று மூர்த்தியாய், மூன்று மில்லாத்
தானமே தானாம் என்னுஞ் சகசநிர் வாண னாகி,
வானமே போலச் சாட்சி, வகித்துல கெல்லாம் போற்ற
ஞானமாம் அமுத தாரை நல்கிடும் பகவன் இன்னோன்!

அன்னிய மறியா ஞானி ஆ, குரங் கணில்மான் புள்ளுந்
தன்னிக ரென்றே கோள்வோன்; சகசநிர் வாண சித்தன்,
போன்னிற வண்ணன்; உள்ளப் போருளையே போருளாய்க் கோண்டோன்
அன்னவன் காட்சி சச்சி தானந்தக் காட்சி யாமே!

### அவரின் உபதேசம்.

சகசத்தனி யிதயத்தமர் சத்தாகிய ஒருவன்,
சகசித்திர விளையாடலைச் சலனப்பட மெனவே
சுகநித்திரை தனிற்காண்பவன் சொல்லாமறை வடிவோன்—
முகபத்தும மதுவுண்டபின் முளையற்றதென் வினையே!

எதிலே யெல்லாம் உதித்ததுவோ, எதிலே எல்லாம் உறைவதுவோ,
எதிலே யெல்லாம் அடங்கிடுமோ எதுவே உயிருக் குயிராமோ,
அதிலே மனதைக் கரைத்ததுவே அகில வுலகம் என்றறிந்தால்,
புதிதே யில்லை, முதியதில்லை, புறமும் உள்ளும் பூரணமே!

தன்னை யகலா திருப்பதுவே தலையாங் கரும முலகினிலே,
தன்னை யறியும் அருளறிவே தலையாமறிவா முலகினிலே,
தன்னை யன்றி வேறெண்ணாத் தவமே துறவாம் உலகினிலே
பின்னை யென்னை பெற்றாலும் பெற்ற தொன்று மிலையாமே!

இருக்கு மிடத்தி லிருந்துவிட்டால், இரண்டு மில்லை மூன்று மிலை
தருக்க வாதத் தொல்லையிலை; சாத்திரத்தின் சண்டையிலை.
பெருக்கப் பேசுஞ் சாதனத்தின் பெயருமில்லை அகங்கார
வருக்க மில்லை தனையறிந்த வாய்மை யொன்றே வாழ்வாமே!




# இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

"மா, மா!" என்று ஆர்வக்கனலுடன் கூவிக் கூவி தெய்வ சக்தியை சாட்சாத்கரித்தார் பரம ஹம்ஸர். அவரது அன்பிற்குக் கல்லிலும் காளி சக்தி யெழுந்தது. "அம்மா! உன்னைக் கண்ணாரக் காண வேண்டும்; வா, வா, உன்னைக் காணாது உயிர் வைத்திருக்க மாட்டேன்!" என்று ஒரு வாளால் தன்னை வெட்டிக் கொள்ளப் போகும்போது மஹா சக்தி அருள் பூத்தாள்; அன்பனுட் புகுந்தாள். பக்தியின் தீவிரத்தால் மூலசக்தி யெழுந்தது. அதை இரவில் பஞ்சவடியில் தியானத்தால் வளர்த்தார் பரமஹம்ஸர். "நீ ஆன்மா; எல்லாம் அதுவே" என்று உபதேசித்து நிர்விகல்ப சமாதிக்கு வழி காட்டினார் தோதாபுரி. பரம ஹம்ஸர் ஆறு மாதம் ஆழ்ந்த ப்ரம்ம சமாதியில் இருந்தார். தன்னைக் கண்டபின், சாக்த பௌத்த கிறிஸ்தவ இஸ்லாமிய சீக்கிய மதானுபவங்களும் அவருக்கு எளிதிற் கிடைத்தன.

எல்லா சித்தியும் பெற்ற பிறகே "குழந்தைகளா வாருங்கள்!" என்று கோபுரத்தின் மேலேறிச் சீடரைக் கூவினார் பரமஹம்ஸர்.

நரேன், "ஐயா கடவுளைக் கண்டீரா? காட்டுவீரா? என்றதும் "ஆஹா கடவுளைக் கண்டேன் காட்டுவேன்" என்றார் பரமஹம்ஸர். விவேகானந்தரிடம் நாராயணனைக் கண்டார். நானே இந்த வடிவானேன் என்று சீடரைச் சுட்டினார். தனது சக்தியை நரேனுட் செலுத்தி மஹாசமாதியடைந்தார். அந்த சக்தியே சிக்காக்கோ மேடையில் வேதாந்த கேசரியாக நின்று கர்ஜித்து உலகை ஞான வெற்றி கொண்டது. பல நதிகள் ஒரு கடலிற் கலக்கின்றன; பல சமயங்களிலும் ஒரே பரம் பொருள் உள்ளான். அவனடி பற்றி உலகில் வாழுக என்றுபதேசித்தார், பரமஹம்சர். அந்த அருள்வாக்கு இன்று உலகெல்லாம் பரவி அற்புதமான ஞானப்பணிகளையும், பொது நலப் பணிகளையும் புரிகின்றது!

வென்றனை மனத்தை; அன்பு வெறியெழத் தாயைக் கூவி
நன்றவள் அருளைப் பெற்றாய்; ஞானமா மழை பொழிந்தாய்.
குன்றாளிர் விளக்கே! காளி கோயிலின் குருவே! பாரில்
என்றுமுன் சக்தி யோங்கி யிலகுக புதிய வாழ்வே!



# விவேகானந்தப் படலம்

## அவரின் வரலாறு

கங்கையணி சிவனருளால் கல்கத்தா தத்தர்குல மணியாய் வந்த
வங்கமணி, நல்லடியார் சங்கமணி, வரம்பெற்ற வேத ஞானச்
சிங்கமணி பரமஹம்ஸச் சீடர்மணி, நவபார தத்தின் வீரத்
தங்கமணி யானவிவேகானந்தத் தவமணியைச் சிந்தை செய்வாம்!

பாரின்பக் கலை பயின்றும் படர்கவலைக் கடல்கடக்கும் படகிலானாய்ப்
"பேரின்பப் பெருக்கான பிரமத்தை நேராகப் பிறங்கக் காட்டி;
யாரின்பமளித்திடுவார்" எனயாங்கும் பரபரப்பாய் அலைந்தலைந்து
நேரின்பப் பொருள்கண்ட நிறையின்ப ஹம்ஸனடி நின்றான் மாதோ!

"அருவான கடவுளைநீர் அறிவீரோ? காட்டியெனக் கருளுவீரோ?
திருவாரும் பெரியாரே?" எனக்கேட்குந் தீரனைமுன் கண்டு, "ஞானக்
கருவான கடவுளைநான் கண்ணாரக் காண்கின்றேன்; காட்டவல்லேன்;
உருவான திருவருளால் உணர்வாம்" என் றுரைத்தானவ் வுண்மை கண்டோன்.

## வேதாந்த கர்ஜனை.

சீரதிருந் திருச்சபையில் வேதாந்தச் சிங்கமன்று பொழிந்த செஞ்சொல்,
ஆரமுதக் கடல்போலே அவையதிரக் கரமதிர "ஹா ஹா" வென்றே
பேரதிரப் புகழதிரச் சமரஸத்தின் மனமதிரப் பெருமை பெற்றே
ஊரதிரப் பாரதத்தின் ஒளியதிர, உலகதிர ஓங்கிற் றன்றே!

சலநிதியி லோநதிகள் சலசலத்துப் பாய்ந்தெல்லாஞ் சமதையாகும்,
உலகமத மெல்லாமும் உள்ளுண்மை ஒன்றினிலே ஒன்றி நிற்கும்
இலகுபொதுப் பொருளுக்குச் சாதியிலை யினமில்லை இதனை எண்ணிக்
கலகமற ஒருகுலமாய்க் கலந்தினிதுகருத்தொன்றி வாழுவோமே.

மெத்தவுல காயதத்தின் மினுக்கினிலே மோகித்த மேலைநாடாம்
வித்தமிகும் அமெரிக்கா, யுத்தமிகும் ஐரோப்பா வியக்க வெங்கும்,
அத்துவிதப் பொருள்காட்டி அருள்காட்டி, ஆன்மசுதந் தரத்தை நாட்டி,
சுத்தமிகு வெள்ளன்பர் தொடரவே தாய்நாட்டின் கரையைத் தொட்டான்

புதுமையிது புதுமையெனப் புலவோர்கள் போற்றி செயச் சேதுநாடன்
இதுபெரிய சம்பவமென் றெழுப்பியதோர் வெற்றித்தூண் முன்னே நின்று
முதுகடலைக் கடந்தோலித்த முனிஞான முரசென்னும் விவேகானந்தன்,!!
பொதுநலஞ்செய் யோகத்தைப் புரிந்திடவே பாரதரை அமைத்தான் மாதோ

# ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்

ஸ்ரீ அரவிந்தர் பெரிய சக்திமான்; சித்திமான்; புத்திமான். அவரது யோக சக்தியை பரிசுத்தமான ஆதார மலர்ச்சியுடன் ஏற்றால் உடல் சிலிர்க்கும்; உள்ளம் சிலிர்க்கும். அவரது அழகு, அறிவு, பொலிவு, அன்பு, ஆற்றல், அருள்வாக்கு ஆகிய எதைக் கண்டாலும் அதிலேயே நமது உள்ளம் லயித்துப் போகிறது.

மனிதன் அஞ்ஞானத்தில் வாழ்கிறான்; அவன் விஞ்ஞானத்தில் வாழவேண்டும்; அவன் உணர்வை அத்யாத்ம வுணர்வாக்க வேண்டும்; அவனுள் உள்ள கடவுளை விளக்க வேண்டும்; பிணி, மூப்பு, சாக்காடு நிறைந்த அவனது இயற்கை யுடலையும் ஒளியுடலாக மாற்ற வேண்டும்; நரவாழ்வு அமரவாழ்வாக வேண்டும்; இப்போதுள்ள மனித வாழ்க்கை அச்சம், இருள், கட்டு, கவலைநிறைந்தது; அதை சாந்தம், சிவம், சுந்தரம், மங்களந் துலங்கச் செய்ய வேண்டும். கட்டும் கலக்கமும் கவலையும் ஒழிந்து, ஆத்ம சுதந்தரத்தில் எல்லாரும் வாழ வேண்டும்.

"உலகம் பொய், துன்பம்" என்று சிலர் ஆகாசத்தைப் பார்க்கிறார்கள்; அது கூடாது; இந்த உலகிலேயே, இந்த வாழ்விலேயே, நமது கண்ணுக்கு முன்னாலே சுவர்க்கானந்தத்தை, திவ்ய ஜீவனத்தை, வானரசை நிலைநாட்ட வேண்டும். மனித ஜாதி மனங்கடந்த விஞ்ஞான சித்தி பெற்று தேவ ஜாதியாக வேண்டும்.... எவ்வளவு மகத்தான ஆதர்சம்! இந்த அற்புதம் நிறைவேறுமா ?.

"நிறைவேறும்" என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். "உணர்ச்சி மேலோங்குகிறது; இப்போது அது மனத்தளவுள்ளது; இனி அது மனத்தினும் ஓங்கி உயர்ந்து விஞ்ஞான நிலையைப் பெற்றே தீரவேண்டும். விஞ்ஞான சித்தி பெற்றால் மேற் சொன்ன அற்புதம் நடக்கும்; இகத்தில் பரம் துலங்கும்; மனித ஜாதி தெய்வ ஜாதியாகும்; மண்ணுலகில் விண்ணரசு விளங்கும்" என்று உறுதி கூறுகிறார் ஸ்ரீ அரவிந்தர். அவரது யோக நூல்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு வரியிலுங்கூட இந்த உறுதியே பெரிதாக ஒலிக்கும். அவர் சொல் ஆழ்ந்த சொல். அந்தச் சொல்லை நிறைவேற்ற அவர் ஒரு மஹாசக்தியை உருவாக்கி முன்வைத்திருக்கிறார். ஜகன் மாதாவாகிய அந்தச் சக்தியை வணங்குகிறேன்; அது பரம பாவன சக்தி; மண்ணுடலைப் பொன்னுடலாக்கி, நரனில் நாரணனை விளக்கும் அந்தச்சக்தி, எனது அன்பில் நிறைந்து, எடுத்த காரியத்திற்கு வெற்றி யருளுக!



# அருட்செல்வம்

——:-:——

எண்ணெயும் திரியும் உள்ளன—இருளைப் போக்குமா? இருளைப் போக்க ஒளிவேண்டும். திரியில் சுடர் விளங்கவேண்டும். றேடியோப் பெட்டியுள்ளது; விசையை அமுக்குகிறோம். மின்சாரம் இல்லை; பாட்டுக் கேட்குமா. றேடியோ ஓடுவதற்கு மின்சக்தி வேண்டும். நமக்கு உடல், பலம், பணம் காசு உள்ளன; எனினும் மனம் அமைதியாவதில்லை. விளக்கிற்கு ஒளி, றேடியோவிற்கு மின்சக்திபோல் வாழ்விற்கு அருட்செல்வம் வேண்டும். பொருட்செல்வம் எத்தனையிருந்தாலும் உள்ளின்பம் தராது. அருட்செல்வமே இன்பமாகும். செல்வத்துட் செல்வம் அருட்செல்வம். உலக வாழ்விற்குப் பொருள் உடல், அருள் உயிர்போன்றது. பொருளின்றி உடலின்பமில்லை அருளின்றி உள்ளின்பமில்லை. ஆடை, உணவு, இருக்கை, ஊர்மதிப்பு, கல்வி, தொழில் செல்வம் எல்லாம் பொருளால் வரும், அன்பு, கருணை, ஈகை, ஒப்புரவு, அமைதி, அறிவு, கலை, சுதந்தரம் ஆத்மசுத்தி, சமத்துவம், சன்மார்க்க ஒற்றுமை, கடவுளுணர்ச்சி இவையெல்லாம் அருளால் வரும்.

அருளுடையார் எல்லாம் உடையார். பொருள்மட்டுங் கொண்டவரிடம் தன்னலம், போட்டி, பொறாமைகள் இருக்கும். உலக வல்லரசுகளிடம் பொருளாட்சியுள்ளது. ஆனால் அதன்பின்னே அணுவெடிகளும், கதிர்வெடிகளும் நோய் வெடிகளும் படபடத்துப் போர்ப் பேயைக் கிளப்பிவிடுகின்றன. பொருளாட்சியும் ஸயன்ஸ் மூளையும் உலகிற்குச் சமாதானம் தரவில்லை. அருள் என்கிற அமர சஞ்சீவியை இந்நாடுகள் நெஞ்சில் வளர்த்தால், பேராசை ஒழியும்; மனம் தெளியும், தன்னைப்போலப் பிறரை மதிக்கும் தயவும் சமநோக்கும் உண்டாகும். எல்லாரும் சுத்தான்ம வடிவங்கள் என்ற ஒருமை உண்டாகும். ஆன்ம நேயம் வளரும். தன் பசிபோலப் பிறர் பசி தீர்க்கும் கருணையும் ஈகையும் விளங்கும். பிறகு தன்னுயிர்போல் மன்னுயிரைக் காணும் ஜீவதயை உண்டாகும். அப்போது மனிதன் தன் உடலைப் பெருக்கப் பிறவுயிர்களைக் கொன்றுண்ணான். உயிர்க் கருணையாலே போர்ப் பேயும் ஒழியும்; உலகம் அமைதி பொலியும். அப்போது உலகில் தனி உடைமை இராது. பொது உடைமைச் சுயேச்சாதிகாரம் நாசவேலை செய்யாது. எல்லாம் அருளுடைமைமாகும். நமக்கும் புவிக்கும் மேலே ஒரு தலைவன் இருக்கிறான் என்பதை உணர்வோம்.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் எவ்வளவு ஒழுங்காகப் பவனிசென்று அருணக்கதிரிற் கலக்கின்றன! அதேபோல் மானிட வாழ்வும் தோன்றாத் துணையான இறைவன் திருவருள் ஏவியபடியே தர்மசாதனம் செய்து, தூய சுதந்தர வழியில் இயல்பாக நடந்து, சமத்துவம்பேணி, அனைத்திற்கும் தாயகமும் தாரகமும் ஆன இறைவன் அருளைக் கூடும். மனித வாழ்வு இறைவன் அருளில் எழுந்து, அருளில் வாழ்ந்து, அருளிற் கலப்பதே இயற்கையான தூய மெய்வழியாகும். இந்த வழி எல்லா மதங்களுக்கும் பொதுவாகும். இதுவே சுத்தசன்மார்க்கம் என்பது. இந்தத் தூய மெய்வழியை விளக்கவே உலகிற்குப் பல அருட்செல்வர் போந்தனர். வேதரிஷிகள் முதல் வள்ளலார் வரையில் எத்தனையோ அருட்செல்வர் சன்மார்க்க ஒளிகாட்டிச் சென்றனர். அவர்கள் இன்று நம்முன் பாமாலையாக விளங்குகிறார்கள். அவர்கள் அருளிய திருவாக்குகள் மானிடத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்தும்.

அருளே உலகை ஆக்குவதும்
ஆன்ற உலகைக் காப்பதுவும்
அருளே உலகை ஆளுவதும்
அணிவகுத்து நடத்துவதும்
இருளே போக்கி இருவினையின்
இடரை நீக்கித் தூயபரம்
பொருளே விளக்கப் பொதுமன்றம்
பொலியும் அருளைப் போற்றுவமே!

❁ ❁ ❁

வாழ்க! வாழ்க! அருட் செல்வம்
வாழ்க! செல்வத் தொழில் வழமை
வீழ்க வறுமை அச்சம் இருள்
விளைக உண்மை அறிவின்பம்
தாழ்க தீய போர் வெறிகள்
சக்தி வளரும் சாந்த நிலை
சூழ்க! திருக்கள் மிகப் பொலிய
சுத்த சங்கம் வாழியவே!

---

## சுத்தானந்தர் கொழும்பு வரவேற்புக் குழுவின் நிர்வாக சபை.

சேர். கந்தையா வைத்தியநாதன் (தலைவர்)

| | |
|---|---|
| திரு. M. கனகசபை | திரு. H. ஜீவத்ராம் |
| ,, P. ஸ்ரீஸ்கந்தராஜா | ,, M. வைரவப்பிள்ளை |
| ,, S. சிவசுப்பிரமணியம் | ,, R. செல்லப்பா |
| ,, K. V. S. சுந்தரம் | ,, K. இராமச்சந்திரன் (காரியதரிசி) |



# யோகி சுத்தானந்தர் இலங்கை விஜயம்

———()———

| | | |
|---|---|---|
| 19-10-52 | மாலை 3-30: | ரத்மலானை விமான நிலையத்தில் சந்தித்தல். |
| 20-10-52 | மாலை 4-00: | கொழும்பு நகரசபை வரவேற்பு. |
| | மாலை 5-30: | ,, பொதுமக்கள் வரவேற்பு. |
| 21-10-52 தொடக்கம் 25-10-52 வரையில்: | | இராமகிருஷ்ண சங்கம், சைவ மங்கையர் கழகம், கொழும்பு தமிழ் சங்கம், அன்பு மார்க்க சங்கம், விவேகானந்தசபை முதலாய சங்கங்களின் வரவேற்புகள். |
| 26-10-52 | காலை 8-00: | கண்டி செல்லுதல். |
| | மாலை 5-00: | கண்டி வரவேற்பு. |
| 27-10-52 தொடக்கம் 3-11-52 வரையில்: | | கண்டி, கம்பளை, நாவலப்பிட்டியா, ஹற்றன், புண்டுலோயா, நுவரேலியா, பண்டாரவளை, வதுளை முதலாய இடங்களில் வரவேற்புகள். |
| 4-11-52 | மாலை 5-30: | கொழும்பு **Y. M. B. A.** பிரசங்கம். |
| | 8-00: | பாணந்துறை வரவேற்பு. |
| 5-11-52 — 6-11-52: | | கதிர்காம யாத்திரை. 6 11-52 மாலை திரும்பும்போது மாத்தறையிலும் காலியிலும் வரவேற்புக் கூட்டங்கள். |
| 7-11-52 | காலை 7-30: | களுத்துறையில் கூட்டம். |
| | பின்னேரம்: | குலியப்பிட்டியா போய், அங்கிருந்து குருநாக்கல் மார்க்கம் மட்டக்களப்புக்குச் செல்லுதல். |
| 8-11-52 | காலை 7-40: | மட்டக்களப்பு ஊர்வலமும் வரவேற்பும். |
| | மாலை 6-00: | சிவானந்தர் வித்தியாசாலை பரிசளிப்பு. |
| 9-11-52 — 12-11-52: | | மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, வாழைச்சேனை முதலாய இடங்களில். |
| 13-11-52 — 15-11-52: | | பொலனறுவை, திருக்கோணமலை. |
| 16-11-52 — — —: | | சிகிரியா, மாத்தளை, டம்பூலா, கெக்கிறுவை. |
| 17-11-52 — — —: | | அனுராசபுரம். |
| 18-11-52 — — —: | | திருக்கேதீச்சரம், வவனியா, கிளிநொச்சி. |
| 19-11-52 — 2-12-52: | | யாழ்ப்பாணப் பிரிவில். விபரங்கள் அடுத்த ஜோதியில் வரும். |

அடிகளின் இலங்கைச் சுற்றுப்பிரயாணம் அவர் கோரியபடியே ஸ்ரீ நாகபூஷணியம்மன் சந்நிதானத்தில் மோனதியானத்துடன் முடிவடையும்.

Registered at the G.P.O. as a News paper, No. 59/300.

## அபிமானிகட்கு ஓர் விண்ணப்பம்:-

இந்தச் சுடருடன் ஆத்ம ஜோதியின் நான்காம்ஆண்டு மங்களகரமாக முடிவடைகின்றது. சென்ற நான்கு ஆண்டுகளாக முழு ஆதரவும் அளித்த அன்பர்களுக்கு நன்றிகூறி, ஐந்தாம் ஆண்டு சந்தாப் பணத்தையும் நவம்பர் 10-ம் திகதிக்கு முன் அனுப்பி வைத்து உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம். அத்தோடு ஒவ்வொருவரும் ஒரு புது சந்தாதரரையும் சேர்த்து இப்பணிக்கு உற்சாகம் அளிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

சென்ற ஆண்டு அல்லது அதற்கு முன் இருந்தே சந்தாப் பணத்தை இதுவரையில் அனுப்பத்தவறிய அன்பர்களே, அப்படி வரவேண்டிய தொகையை புது ஆண்டுச் சந்தாவுடன் சேர்த்து, மேலே குறிப்பிட்டுள்ள திகதிக்குமுன் அனுப்பும்படி வேண்டுகின்றோம். இவர்களில் பலர் நாம் எழுதிய கடிதங்கட்கு பதில்தானும் தராமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆரம்பத்தில் தீர்மானித்துக்கொண்ட லட்சியத்துக்குப் பொருந்த, விளம்பரமூலம் வருவாயின்றியும், வி. பி. மூலம் சந்தாப் பணம் வசூலிக்கும் வழக்கமின்றியும் ஓர் ஆத்மீக வெளியீட்டை மாதந்தோறும் ஒழுங்காகப் பிரசுரிப்பது எவ்வளவு கஷ்டமான பணி என்பதை இங்கு விவரிக்கத் தேவையில்லை.

**ஆத்ம ஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி, (சிலோன்)


## சுவாமி சுத்தானந்தர் 'அர்ச்சனைமாலை'

- மந்திரங்களைத் தமிழில் சொல்லவேண்டும்.
- தமிழுக்கு மந்திரசக்தி உண்டு. இதை நமது தவயோகி சுத்தானந்த பாரதியார் மெய்யாக்கினர்.
- அவர் தாமே தமிழ் மந்திரங்களால் இறைவனை வழிபட்டார்.
- அம் மந்திரமாலைத் தொகுதியே இந்நூல்.
- புதிய அழகிய பதிப்பு சுவாமிகள் படத்துடன். பஜனைக்கும் பரிசுக்கும் குறைந்த செலவில் சிறந்தபுத்தகம்.

**தனிப் பிரதி தபால் செலவு உட்பட -/60 சதம்.**
புத்தகசாலைகட்கு போதிய கமிஷன் கொடுக்கப்படும்.
தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றுசதம் தபால் முத்திரைகளாக அனுப்பியும் பெறலாம்.

**"சரவண அச்சகம்"** நாவலப்பிட்டி.


வீரகேசரி பிரஸ், கொழும்பு.